**சார்பு நீதிமன்றம், சீர்காழி**
முன்னிலை : **திருமதி S. மும்தாஜ், B.Sc.,B.L.,**
சார்பு நீதிபதி, சீர்காழி
*******

2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 09–ம் நாள் புதன்கிழமை
**<u>இடைமனு எண். 02/2025 ல் அசல் வழக்கு எண். 49/2023</u>**

செல்லம்மாள் ...மனுதாரர் /பிரதிவாதி

...எதிர்...

பிரகாசம் ...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 09.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி. எம். சுதா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.ஆர். ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகிய நிலையிலும், இருதரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை என் சீரிய பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

அசல் வழக்கில் மனுதாரர் வாதிக்கு எதிராக கூடுதல் வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி வழங்க உத்தரவாக வேண்டி, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 9 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுவின் சுருக்கம்:</u>**

இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. பிரதிவாதி மீது வாதி சுவாதீன மீட்பு பரிகாரம் கேட்டு அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போது, மனுதாரரின் மகனுக்கு உடல்நிலை சரியில்லாமல் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை அளித்து வந்த காரணத்தால் வழக்கறிஞரை சந்தித்து வழக்கிற்கு தேவையான முக்கிய விபரத்தை கூறாமல் எதிர்வழக்குரை தாக்கல் செய்து விட்டதாகவும், தற்பொழுது மனுதாருக்கு வழக்கிற்கு தேவையான சில முக்கிய ஆவணங்கள் கிடைத்துள்ளதால், அசல் வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்ய அனுமதி வேண்டி இம்மனுவை தாக்கல்

செய்துள்ளார்.

**2. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனை மனு:**

மனுவில் கூறியுள்ள சங்கதிகள் உண்மையில்லை. மேற்படி வழக்கில் வாதி தரப்பில் வாதி ஏற்கனவே நிருபண வாக்குமூலம தாக்கல செய்தும், ஆவணங்கள் குறியீடு செய்தும், குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் இந்த மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி ஆட்சேபனை தெரவித்துள்ளார்.

**3. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்?**

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்? மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கக்கூடியதா? என்பதேயாகும்.

**4. தீர்வு :**

மனுதாரர் தரப்பில் மனுதாரர் அசல் வழக்கின் பிரதிவாதி என்றும், மனுதாரருக்கு எதிராக பிரதிவாதி சுவாதீன மீட்பு பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டபோது மனுதாரரின் மகனுக்கு உடல்நிலை சரியில்லாமல் சிகிச்சையில் இருந்ததால் வழக்கறிஞரை சந்தித்து முக்கிய விவரங்களை கூறவில்லை என்றும், தற்போது வழக்கிற்கு தேவையான சில முக்கிய ஆவணங்கள் கிடைத்துள்ளதாகவும், எனவே கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்ய அனுமதிக்க கோரியுள்ளார். இதற்கு எதிர்மனுதாரர் /வாதி தரப்பில் அசல் வழக்கில் வ.சா.1யை குறுக்கு விசாரணை நிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை தள்ளுபடி செய்யக் கோரியுள்ளார்.

5. வழக்காவணங்களின் பரிசீலனையில் அசல வழக்கானது வாதியால் சுவாதீன மீட்பு பரிகாரம் மற்றும் செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் ஏற்கனவே எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக உள்ள நிலையில் மனுதாரரால் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் இம்மனுவுடன் மனுதாரர் கூடுதல்

எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் ஒரு முழுமையான தீர்வு காண நீதியின் நலன் கருதி பின்வரும் நிபந்தனையுடன் இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

5. **முடிவாக,** மனுதாரர் செலவுத்தொகையாக ரூ.500/– எதிர்மனுதாரருக்கு 24.08.2025 ம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

(அழைக்க – 25.08.2025 )

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று (09.07.2025) திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/–...S. மும்தாஜ்)
சார்பு நீதிபதி, சீர்காழி

<u>**பின் இணைப்பு**</u>

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> இல்லை
<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> இல்லை
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> இல்லை
<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> இல்லை

(ஒம்/–...**S. மும்தாஜ்)**
சார்பு நீதிபதி, சீர்காழி.

நேரிய/**வரைவு உத்தரவு**
வ.வி.எண். 02/2025
அ.வ.எண்.49/2023
நாள் –09.07.2025

**சார்பு நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திருமதி S. மும்தாஜ், B.Sc.,B.L.,**

சார்பு நீதிபதி, சீர்காழி

*******

2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 04–ம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைமனு எண். 03/2025 ல் அசல் வழக்கு எண். 252/2023**

1. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சிபி புதுப்பட்டனம் கிராமம், மடவாய்மேடு பெருமாள் கோயில் தெருவில் வசித்து வரும் கலியபெருமாள் குமாரர் 72 வயதுள்ள குமார் (எ) சாமித்துரை.

2. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சிபி புதுப்பட்டனம் கிராமம், மடவாய்மேடு பெருமாள் கோயில் தெருவில் வசித்து வரும் கலியபெருமாள் குமாரர் 30 வயதுள்ள திருநாவுக்கரசு
3. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சிபி புதுப்பட்டனம் கிராமம், மடவாய்மேடு பெருமாள் கோயில் தெருவில் வசித்து வரும் கலியபெருமாள் குமாரர் 28 வயதுள்ள விஜயபாலன்

...மனுதாரர்கள் /1,5,6 பிரதிவாதிகள்

...எதிர்...

சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சிபி புதுப்பட்டனம் கிராமம், மெயின்ரோட்டில் வசிக்கும் இலவன் குமாரர் சுமார் 38 வயதுள்ள கார்த்திக்.

...எதிர்மனுதாரர்/வாதி

அசல் வழக்கில் கடந்த 28.08.2023 அன்று மனுதாருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து உத்தரவாக வேண்டி, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மனு தாக்கலான நாள் | –12.02.2025 |
| மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | –05.03.2025 |
| மனுவின் நீதிமன்ற கட்டணம் | – ரூ.20/– |

இம்மனு என் முன்பாக 04.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சுவாமிநாதன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.எஸ். எஸ்.சுந்தரய்யா அவர்கள் ஆஜராகிய நிலையிலும், இருதரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை என் சீரிய பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு கட்டளையிட்டு வழங்கும்.

**<u>உத்தரவாணை</u>**

1. இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

2. மனுதாரர்கள் செலவுத் தொகையாக ரூ.1,000/-யை எதிர்மனுதாருக்கு 28.07.2025ம் தேதிக்குள் கொடுக்க வேண்டுமென்றும், மனுதாரர்கள் தரப்பு எதிர் வழக்குரையை தாக்கல் செய்ய வேண்டுமென்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

2025ம் ஆண்டு ஜீலை மாதம் 4ம் நாள் என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு வழங்கப்பட்டது.

சார்பு நீதிபதி, சீர்காழி

**உத்தரவாணை**
வ.வி.எண். 03/2025
அ.வ.எண்.252/2023
நாள் –04.07.2025